IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

SC.NO.159/2021

Deposition of Witness for P.W.15

| | | |
|---|---|---|
| NAME | - | **திரு.கோவிந்தசாமி** |
| FATHER NAME | - | |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | **துணை காவல் கண்காணிப்பாளர், செய்யாறு சட்டம் ஒழுங்கு உட்கோட்டம், திருவண்ணாமலை மாவட்டம்.** |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.11.2025.

எதிரிகள் ஆஜர். 4, 7, 6 எதிரிகள் ஆஜரில்லை . மனு ஏற்பு. வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்போது துணை காவல் கண்காணிப்பாளராக செய்யாறு சட்டம் ஒழுங்கு உட்கோட்டத்தில் பணிபுரிகிறேன். நான் கடந்த 03.01.2015 வேப்பங்குப்பம் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது ஒடுகத்தூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.செல்வகுமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை காவல் உதவி ஆய்வாளர் திருமதி.வாசுகி வேப்பங்குப்பம் காவல் நிலைய குற்ற எண். 01/2015 கு.வி.மு.ச 174 படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து காவல் ஆய்வாளராகிய என் பார்வைக்கு வைத்துக் கொண்டதை என் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். மறுநாள் 04.01.2015 அன்று காலை 8.00 மணி சம்பவயிடம் சென்று சாட்சிகள் விநாயகமூர்த்தி, வேணுகோபால் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகசர் பதிவு செய்தேன். பார்வை மகசர் அ.த.சா.ஆ.12 மாதிரி வரைப்படம் அ.த.சா.ஆ.13 ஆகும். அன்றைய தினமே காலை 10.00 மணி முதல் 12 மணிவரை இவ்வழக்கில் இறந்துபோன சீனு (எ) சீனிவாசன் என்பவரது பிரேதத்தின் மீதான பிரேத விசாரணை வேலூர் அரசு கல்லூரி மருத்துவமனை சவக் கிடங்கிடம்

பிரேத விசாரணையை சாட்சிகள் மற்றும் பஞ்சாய்த்தார் முன்னிலையில் செய்தேன். பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.14 ஆகும். பிரேதத்தை தலைமைக் காவலர் ஆனந்தன் 580 மூலம் சடல கூறாய்வு செய்ய வேண்டுகோள் கடிதத்துடன் ஒப்புவித்தேன். சாட்சிகள் செல்வகுமார், வெங்கடேசன், கிருஷ்ணமூர்த்தி, நாராயணன், ராஜேஷ், வெங்கடேசன், ருத்திரமூர்த்தி, விஜயலட்சுமி, குமரேசன், வேணுகோபால் மற்றும் விநாயகமூர்த்தி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை-</u>

புகார் மற்றும் எனது விசாரணையில் இறந்த நபரின் இறப்பு குறித்து எவ்வித சாட்சியும் சந்தேகம் குறித்து எதுவும் சொல்லவில்லை. நிலத்தின் உரிமையாளர் புகார் குறித்து எதுவும் சொல்லவில்லை. எனது விசாரணையில் இறந்த நபர் குடித்துவிட்டு நாய் துரத்தி வேணுகோபால் கிணற்றில் கால் தவறி விழுந்துவிட்டார் என சாட்சி வெங்கடேசன், கிருஷ்ணமூர்த்தி, நாராயணன், வெங்கடேசன், ராஜேஷ், ருத்திரமூர்த்தி, ஜெயலட்சுமி மற்றும் குமரேசன் சொல்லியுள்ளார்கள் என்றால் சரி. இறந்த நபரை கடைசியாக 10 நாட்களுக்கு முன்பாக பார்த்ததாக சாட்சி சொல்லியுள்ளார்கள் என்றால் சரி. சம்பவயிடத்தில் நபர்கள் குடித்த மாதிரி எவ்வித தடயமும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரி.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 20.11.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2025.11.20 17:52:46 +0530

Additional District Judge(FTC),
Vellore